# அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி...

முதல் பக்கத் தொடர்ச்சி

வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் இன்னொரு மகிழ்ச்சியான செய்தி நம்முடைய முதலமைச்சர் வரக்கூடிய 17.08.2024 அன்று இந்தியாவிலேயே முதன்முறையாக நம்முடைய தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) சார்பில், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் வல்லமடுகால் பகுதியில் 706.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கக்கூடிய 18,720 படுக்கை கள் கொண்டிருக்கக்கூடிய தொழிற்சாலைப் பணியாளர்கள் தங்குவதற்கான கட்டிடத்தை பாக்ஸ்கான் நிறுவனத்திற்காக அது கட்டப்பட்டிருக்கிறது. அந்த கட்டிடத்தை முதலமைச்சர் அவர்கள் அதை திறந்து வைக்க இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

### மூன்று முக்கியமான கொள்கைகளுக்கு ஒப்புதல்!

இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூடிய இந்த அமைச்சரவை கூட்டத்தில் மூன்று முக்கியமான கொள்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

எரிசக்தி துறையின் மூலம் குறிப்பாக, இந்த பட்ஜெட்டில் கூட இது குறித்து அறிவிப்புகளை வெளியிட்டு இருந்தோம். தமிழ்நாடு நீரேற்று புனல் மின் திட்டம் (PSP Pump Storage),

### காற்றாலை மின்திட்டம்!

தமிழ்நாடு சிறு புனல் மின் திட்டங்கள் (Small Hydal Project) அதற்கான கொள்கை, தமிழ்நாடு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களுக்கான புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்பிற்கான அந்த கொள்கையும் நாம் இப்போது வழங்கியிருக்கிறோம்.

பொதுவாக பசுமை எரிசக்தியில், தமிழ்நாடு முன்னணியில் இருக்கக்கூடிய ஒரு மாநிலமாக இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வரக்கூடிய 2030ஆம் ஆண்டுக்குள்ளாக நாம் 20,000 மெகாவாட் உற்பத்தி நிறுவுவதை நாம் அடைய வேண்டும் என்கின்ற இலக்கினை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறுவி இருக்கிறார்கள். எனவே, இப்போது இருக்கக்கூடிய அந்த நிலையற்று இருக்கக்கூடிய பசுமை எரிசக்தியை நாம் சமப்படுத்தப்பட்ட மின்சாரமாக மாற்றுவததற்கு கட்டமைப்பைக் கொண்டு உருவாக்கி, இந்த மூன்று கொள்கைகளை நாம் கொடுத்திருக்கிறோம்.

அதனால் நான் முன்பே குறிப்பிட்டது போல, புனல் மின்திட்டங்கள் முதல் முறையாக நாம் அதில் கொடுத்திருக்கிறோம். இந்தத் திட்டம் ஏறத்தாழ 5000 கோடி, 6000 கோடி ரூபாய் என்று பெரியளவில் முதலீடாக இருப்பதால், இதற்கு தனியார் பங்களிப்போடு செய்வது அவசியமாக இருக்கிறது. இதற்கு மூன்று ஒதுக்கீட்டு முறையில் இந்த திட்டங்களுக்கான அறிவிப்பைக் கொடுக்கிறோம். அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்காக (Public Sector Undertakings) இருக்கக்கூடிய நீர்த் தேக்கங்களில் கூட்டு முயற்சியில் (Joint venture) செயல்படுத்தக்கூடிய திட்டம். அதன் வாயிலாக, உற்பத்தி செய்யப்படக்கூடிய மின்சாரம் 100% நம்முடைய மாநிலத்திற்கு வழங்க வேண்டும் என்கின்ற ஒரு திட்டம்.

அதைப்போல, நம்முடைய அரசாங்கமும், தனியார் துறையில் செய்திருக்கக்கூடிய புதிய கூட்டாட்சி முறையில் (PublicPrivate Partnership) (PPP Model) செய்யக்கூடிய அந்த முறை.

அதுபோல, திட்ட ஆதரவாளர் முறை என்பது முழுமையாக தனியார் மூலமாக செய்யக்கூடிய முறை என்று மூன்று முறையாக பிரித்து இந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கைகளுக்கு பல்வேறு சலுகைகளும், கட்டணங்களும் நாம் வழங்கியிருக்கிறோம்.

### சிறிய புனல் மின்திட்டம்!

அதைப்போல மற்றொரு முக்கியமான திட்டம், சிறிய புனல் மின் திட்டம் அதையும் நாம் வழங்கியிருக்கிறோம். நான் ஏற்கனவே சொல்லியிருப்பது போல, இது expression of interest என்கின்ற முறையில் ஒரு வருடத்திற்கு இரண்டு முறை அந்தத் திட்டத்தை உருவாக்கக்கூடிய திட்டங்களாக இது பெறப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு இடத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்டிருக்கக் கூடியவர்கள் யாராவது இந்த திட்டத்தின் கீழ் அவர்கள் விருப்பம் தெரிவித்தால், அது அவர்களிடத்தில் ஒப்பந்தப்புள்ளி முறையில் அது பெறப்படும். ஒரு மெகாவாட்டுக்கு மேல் கூடுதலாக இருந்தால் அவருடைய சொந்த மின்சாரம் (Captive power use) அனுமதிக்கக்கூடிய வகையில் வந்திருக்கிறது. எனவே இதுவும் முக்கியமான ஒன்று. இது கரியமிலவாயு (carbon emission) வெளியேற்றத்தை குறைத்து புதிய ஒரு தூய்மையான, மாசற்ற மின்சாரமாக உருவாக்கத்திற்கு இது சரியாக இருக்கும்.

அதே போல, மரபுசார் எரிசக்தியைத் தாண்டி, மரபு சாரா எரிசக்தி முறையில், சுற்றுச் சூழலக்கு உகந்தவாறு இதை செய்வதற்கு இந்தத் திட்டங்கள் இருக்கும். இந்த திட்டத்திலும், நிறைய வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, மிக முக்கியமாக இருப்பது காற்றாலை நிறுவனங்களுக்காக இருக்கக்கூடிய புதுப்பித்த ஆயுள் திட்டம். தமிழ்நாட்டில் 1984ல் இருந்து விண்ஹில்ஸ் நாம் கொடுத்திருக்கிறோம். அது தற்போது, ஏறத்தாழ 40 முதல் 50 ஆண்டுகளுக்கு பிறகு அதனுடைய சக்தி மிகவும் குறைந்திருக்கிறது. எனவே, அந்த ரீ பவரிங் பாலிசி தேவை என்பதை நீண்டகாலமாக நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கிறோம். எனவே, (Win Repowering) காற்றாலைகளை புதுப்பிக்கக்கூடிய இந்தக் கொள்கையின் மூலமாக ஏறத்தாழ 25 சதவீதம் மின் உற்பத்தி அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு வந்திருக்கிறது. ஏற்கனவே இருக்கக்கூடிய பாகங்களை எல்லாம் புதியதாக மாற்றக்கூடிய ஒரு கொள்கை. விண் refurbishment அந்த அடிப்படையில் 10 சதவீத மின் உற்பத்தி அதில் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதுபோல, காற்றாலையில் உள்ள ஆயுளை (Win life extension) நீட்டிக்கக்கூடிய முறைகள்; 20 ஆண்டுகள் முடிந்திருக்கக்கூடிய அந்த காற்றாலைகளை 5 வருடங்கள் ஆயுள் நீட்டிப்பது என்கின்ற முறையில் இருக்கக்கூடிய கொள்கை. இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இந்தத் திட்டம் இருக்கிறது.

இந்தக் காற்றாலை Repowering policy என்பது மிக முக்கியமாக Textiles mills இருக்கக்கூடிய நூற்பாலைகள் நீண்டகாலமாக இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் Monthly banking என்பது சிரமமாக உள்ளதால் Annual bankingகாக வரவேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தினார்கள். குறிப்பாக, கோவை, திருப்பூர் பகுதியில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் நம்முடைய தொழிற்துறை அமைச்சர் அவர்கள் கோவையின் பகுதியில் அவர் பொறுப்பேற்றிருந்தபோது அங்கு இருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகள், அங்கிருக்கக்கூடிய பல்வேறு அமைப்பினரும் கூட அவரிட தொடர்ச்சியாக வலியுறுத்தினார்கள்.

நம்முடைய தொழிற்துறை அமைச்சர் அவர்களும் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அவருடைய பரிந்துரையின் அடிப்படையில் நாம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று இந்த மூன்று கொள்கைகளுக்கும் இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

**கேள்வி:** முதலமைச்சர் அவர்களின் இந்த அமைச்சரவை கூட்டத்தில் இலக்கு வைத்து நாம் ஏதாவது .......

**தொழில்துறை அமைச்சர்** : எப்போதும் முதலமைச்சர் அவர்களை பொறுத்தவரை, தமிழகத்திற்கு எவ்வளவு நிதி வருகிறது என்பதைவிட, எவ்வளவு வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் குறிக்கோளாக உள்ளது. எத்தகைய வேலைவாய்ப்புகள், எங்கெங்கே அந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பரவலாக்கப்பட்ட வளர்ச்சியில் மிகவும் குறிப்பாக இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். எனவே, இந்த முறையும் அதுதான் நம்முடைய நோக்கம். தமிழகம் முழுவதும் இந்தத் திட்டங்களை கொண்டு வந்து சேர்க்கவேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் வளர்ச்சியை கொண்டு வந்து சேர்க்கவேண்டும். மிகச் சிறப்பான முறையில் வேலைவாய்ப்பை கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்.

**கேள்வி:** முதலமைச்சர் அவர்களின் வெளிநாட்டுப் பயணம் எந்தத் தேதியில் இருக்கிறது?

**நிதி அமைச்சர்** : அது குறித்து முதலமைச்சரின் அலுவலகம் முறையான வகையில் உங்களுக்கு தெரிவிக்கும்.

**கேள்வி:** கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத்திட்டம் புதிய பயனாளிகளுக்கு வழங்கப்படுவது குறித்து.....

**நிதி அமைச்சர்** : இன்றைய கூட்டத்தில் அது பற்றி விவாதிக்கப்படவில்லை.

**கேள்வி:**பரந்தூர் விமானம் தொடர்பாக.. Tenderக்கு ஏதாவது உத்தரவிடுவதாக இருக்கிறதா?

**தொழில்துறை அமைச்சர்** : அதன் பணிகள் மிகச் சிறப்பாக போய்க்கொண்டிருக்கிறது.

**கேள்வி** : முதலமைச்சர் அவர்களின் அமெரிக்கா பயணத்தில் எந்தெந்த துறையைச் சார்ந்ததாக இருக்கும்?

**தொழில்துறை அமைச்சர்**: பல்வேறு துறைகளுக்கான அறிவிப்புகள் முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் இருந்து அறிவிப்பார். அப்போது கேட்டுக் கொள்ளலாம்.

இவ்வாறு அவர்கள் பேட்டி அளித்தனர்.

## 'வாட்ஸ் ஆப்'பில் வலம் வரும் கலைஞர் கவிதை!



### பதவி பெரிதல்ல!

பதவியொரு முள்மாலை;
இலக்கியப் பணி எனக்கு முல்லைச்சரம்.
பதவியொரு நெடும்பள்ளம்; பொதுப்பணி
எனக்குப் பொதிகைக் குன்றம்.
மானமா; மகுடமா எனக்கேட்டால்
மானத்தை மட்டுமே மதிக்கும் மனிதன் நான்.
கிரீடமா; தலையா எனக்கேட்டால் நான்
கிரீடமே போதுமென இளிக்கின்ற கிறுக்கனல்ல
நான்.
அதனால்தான் உறவுக்குக் கைகொடுப்போம்
என்றுரைத்துப் பதவி துறவுக்கும் தயாராகப்
பத்தாண்டுக்கும் மேல் கழித்தவன் நான்.
பணிபுரியும் வாய்ப்புத்தான் பதவி.
பதவி, பவிசு, படோடோபம் எல்லாமே ஊதிய
பலூனைப்போல் வெடித்துவிடும்;
பண்பார்ந்த தொண்டொன்றே வானைப்போல்
நிலைத்து நிற்கும்.

(தொலைக்காட்சியில் கலைஞர் அவர்கள் பாடிய
'சித்திரைத் திருநாள்' கவிதையிலிருந்து - 14.4.90)

## 'செபி' தலைவரின் பதில், அவரது முதலீட்டை உறுதிப்படுத்துகிறது!

### ஹிண்டன்பர்க் நிறுவனம் மீண்டும் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.14-

'செபி' தலைவர் அளித்த பதில், அவர் சந்தேகத்துக்குரிய நிறுவனங்களில் முதலீடு செய்திருப்பதை உறுதிப்படுத்துகிறது என்று ஹிண்டன்பர்க் நிறுவனம் கூறியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டு ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க், கடந்த ஆண்டு அதானி குழுமம் மீது பங்குச் சந்தை முறைகேடு குற்றச்சாட்டுகளை சுமத்தியது. அந்தக் குற்றச்சாட்டு குறித்து இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமே (செபி) விசாரிக்கட்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு கூறிவிட்டது. இதற்கிடையே, அதானி குழும நிதி முறைகேட்டுடன் தொடர்புடைய நிறுவனங்களில் 'செபி' தலைவர் மாதபிபுச்,

அவருடைய கணவர்தவல் புச் ஆகியோர் முதலீடு செய்திருப்பதாக கடந்த 10-ந்தேதி ஹிண்டன்பர்க் புதிய குற் றச்சாட்டுகளை தெரிவித்தது. அதற்கு 'செபி' தலைவரும், அதானி குழுமமும் மறுப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், ஹிண்டன்பர்க் நிறுவனம், நேற்று முன்தினம்தனது 'எக்ஸ்' வலைத்தள பக்கத்தில் புதிதாக ஒரு பதிவு வெளியிட்டது. அதில் அந்நிறுவனம் கூறியிருப்பதாவது:

'செபி' தலைவர் எங்களது குற்றச்சாட்டுக்கு பதில் அளித்துள்ளார். ஆனால் அவர் அளித்த பதில், புதிய முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. பெர்முடா, மொரீஷியஸ்நாடுகளை சேர்ந்த சந்தேகத்துக் குரிய நிதியகங்களில் அவர்கள் முதலீடு செய்ததை பகிரங்கமாக உறுதிப்படுத்துகிறது. கவுதம் அதானியின் அண்ணன் வினோத் அதானி முறைகேடாக சேர்த்த பணத்தையும் அதில் முதலீடு செய்துள்ளார். அந்த நிதியம், தனது கணவர் தவல் புச்சின் சிறுவயது நண்பரால் நடத்தப்பட்டது என்பதையும் மாதபி புச் உறுதிப்படுத்தி உள்ளார். அந்த நேரத்தில் அந்த நண்பர், அதானி குழுமத்தின் ஒரு இயக்குனராக இருந்தார். அதானி விவகாரம் தொடர்பான முதலீட்டு நிதியங்கள் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பை 'செபி' ஏற்றுள்ளது. அவற்றில், மாதபி புச் முதலீடு செய்த நிதியங்களும் அடங்கும். இது, நலன் முரண்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சினை ஆகும். இதை எங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டி இருக்கிறோம். மாதபி புச், இந்தியாவில் ஒன்றும், சிங்கப்பூரில் ஒன்றும் என 2 ஆலோசனை நிறுவனங்களை அமைத்ததை ஒப்புக் கொண்டுள்ளார்.

2017ம்ஆண்டு, தான் 'செபி'யின் முழு நேர உறுப்பினர் ஆனவுடன் அந்த நிறுவனங்கள் செயலற்றதாகி விட்டதாகவும், 2019-ம் ஆண்டு அந்நிறுவனங்களை தனது கணவர் ஏற்று நடத்தியதாகவும் கூறியுள்ளார்.

ஆனால், கடந்த மார்ச் 31ந் தேதி நிலவர பங்கு முதலீட்டா ளர்கள் பட்டியல் படி, அவர் தொடங்கிய அகோரா அட் வைசரி லிமிடெட்டின் 99 சத வீத பங்குகள் இன்னும் மாதபி புச்சிடம்தான் இருக்கின்றன.

அவருடையகணவரிடம் இல்லை. மேலும், சிங்கப்பூர் நிறுவனத்தில் 2022ம் ஆண்டு மார்ச் 16ந் தேதி வரை, மாதபி புச் 100 சதவீத பங்குகளை வைத் திருந்தார். 'செபி' தலைவர் ஆன 2 வாரங்களுக்கு பிறகுதான் அந்தப் பங்குகளை கணவர் பெயருக்கு மாற்றினார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் அதிகப்படியான பணிகள் நடைபெற்றிருக்கும் தொகுதிகளில்

## சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிதான் முதலிடம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஆக.14-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் வழங்கல் துறையின் கீழ் ரூ.769.97 கோடி செலவிலான 103 முடிவுற்ற திட்டம் பணிகளை தொடங்கி வைத்து, ரூ.1192.45 கோடி மதிப்பீட்டிலான 30 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். இந்நிகழ்வில் காணொலி காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை பெருங்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரின் மிகப் பெரிய அளவிலான வளர்ச்சி கட்டமைப்பை ஏற்படுத்தி தொடர்ந்து அதனை மக்களுக்கு அர்ப்பணித்து வருகிறார்கள். மழைநீர் வடிகால் பணிகளாக இருந்தாலும், புதிய பாதாள சாக்கடை திட்டப்பணி களாக இருந்தாலும், சாலைகள் அமைக்கும் பணிகள் இருந்தாலும், புதிய தெருவிளக்குகள் அமைக்கும் பணிகளாக இருந்தாலும், கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அதிகப்படியான பணிகள் நடைபெற்றிருக்கும் சட்டமன்ற தொகுதி என்று சொன்னால் சோழிங்கநல்லூர் தொகுதி தான் முதலிடத்தில் இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



20 மாநகராட்சி வார்டுகளும், 7 ஊராட்சி வார்டுகள் கொண்ட மிகப்பெரிய சட்டமன்ற தொகுதியாக சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது. மேலும் ஒட்டு மொத்தமாக சென்னையைப் பொறுத்தவரை 15 மண்டலங்கள் இருந்தாலும், 22 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி யில் சோழிங்கநல்லூர் தொகுதியில் மட்டும் 2 மண்டலங்கள் இருக்கின்றது. முதலமைச்சர் அவர்கள் இன்று ரூ.800.75 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 104 பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் நேரு அவர்கள் மூலம் காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

அதோடுமட்டுமல்லாமல் ரூ.1,192 கோடி மதிப்பீட்டில் 30 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. ஆக இன்று ஒருநாள் மட்டும் சற்றேறக்குரிய ரூ.2000 கோடி அளவிற்கு முதலமைச்சர் திட்டங்களை தொடங்கியும் வைத்திருக்கிறார், முடிவுற்ற பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்தும் இருக்கிறார். குடிநீர் வாரிய வாகனம் 60 இன்று பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இன்று பணி ஆணைகளையும் தந்திருக்கிறார்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக சோழிங்கநல்லூர் தொகுதியில் TNHP சாலையில் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத்திடல் மக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் அர்ப்பணித்திருக்கிறார். அதேபோல் கண்ணகி நர் மற்றும் எழில்நகர் ஆகிய பகுதிகளில் அணுகு சாலைகளை அமைப்பதற்கு ரூ.79 இலட்சம் செலவில் போடப்பட்டுள்ள இந்த சாலைகள் மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. TNHP பகுதியில் ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்பட்டு அதுவும் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் KFW நிதியின்கீழ் விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் கோவளம் வடிநிலப்பகுதியில் M1 மற்றும் M2 பாகங்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்களுக்காக ரூ.666.32 கோடி மதிப்பீட்டிற்கான திட்டப்பணிகளை தற்போது தொடங்கி வைத்திருக்கிறார்கள். வடகிழக்கு பருவமழை, கோடை மழை, தென்மேற்கு பருவ மழை என எந்த பருவ மழைகளாக இருந்தாலும் அதிகம் பாதிக்கப்படும் பகுதியாக சோழிங்கநல்லூர் பகுதி இருந்து வருகிறது. அதற்கான காரணம் அலுவலர்களிடம் கேட்டால் செங்கல்பட்டு மாவட்டத்தில் 40க்கும் மேற்பட்ட ஏரிகளில் நிரம்புகின்ற உபரிநீர் செம்மஞ்சேரி வழியாக பல்வேறு குடியிருப்பு பகுதிகளுக்குள் சூழ்ந்து பிறகு ஒக்கியம் மடுகு போன்ற நீர்நிலைகளின் வழியே பங்கிம்காம் கால்வாய் வழியே கடலுக்கு செல்கிறது.

### கோவளம் - திட்டப் பணிகள்!

முதலமைச்சர் அவர்கள் கோவளம் என்கின்ற மிகப் பெரிய திட்டப்பணிகளை M1 மற்றும் M2 என்கின்ற வடிநிலைப் பகுதிகளை மழைநீர் வடிகால்கள் திட்டத்தினை தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே முடிக்கப்பட்ட பணி களினால் நான் ஏற்கெனவே சொல்லியிருப்பதுபோல சென்னையில் 20 செ.மீ மழை பெய்தாலும் பெரிய அளவிலான பாதிப்பு தற்போது தவிர்க்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன்னாள் ஒரு 7 அல்லது 8 செ.மீ மழை பெய்தாலே வாரக்கணக்கில் மழைநீர் வெளியேற்றிக் கொண்டிருக்கும் நிலை இருந்தது. தற்போது பெரிய அளவிலான மழை பெய்தாலும் பாதிப்புகள் ஏற்படவில்லை, இதற்கு கடந்த ஆண்டு பெய்த வடகிழக்கு பருவமழையின்போது நாம் பார்த்தோம். மேலும் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மெகாஸ்டிஸ் திட்டத்தின் கீழ் கிண்டி பாலம் முதல் ரேஸ்கோர்ஸ் சாலை சந்திப்பு வரை ரூ.20.75 கோடி செலவில் மிகப்பெரிய அளவிலான மாற்றத்தை பெறவிருக்கிறது. மெகாஸ்டிஸ் என்னும் பணி இன்று சைதாப்பேட்டை தொகுதியில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.





தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று முன்தினம் (12.08.2024) தலைமைச் செயலத்திலிருந்து ரூ.76.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட இராமநாதபுரம் அரசு சட்டக்கல்லூரி கட்டடத்தை கானொளிக்காட்சியின் மூலம் திறந்து வைத்ததையொட்டி, மாவட்டகழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம். எல். ஏ, மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் சீத்சிங் காலோன் துவக்கி வைத்து மாணவர்களுக்கும்,மாணவிகளுக்கும், பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்திஷ், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனி , அரசு சட்டக் கல்லூரி முதல்வர் ஜேம்ஸ் ஜெயபால் ஆகியோர் உள்ளனர்.



நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு சந்திப்பிள்ளையார் கோவில் பேருந்து நிறுத்தம் அருகில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் அப்துல்கையூம், சுப்பிரமணியன்,அன்டன் செல்லதுரை,சுப்பையா,பாஸ்கர், வேங்கை வெங்கடேஷ்,கோபால், லெனின்,சடாமுனி,ராபர்ட் செல்லையா,கேபிள் குமரேசன், கவிஞர் மூர்த்தி,பத்மா, சௌந்தரம்,பிந்து,ஜோஸ் வனிதா,ராஜேஸ்வரி,ஆனி, நர்மதா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.